செய்தி வெளியீடு எண். 163 நாள் : 23.03.2017

## திருவள்ளூர் மாவட்டம், மாதவரத்தில் உள்ள கால்நடை பல்கலைக்கழகத்தில் நவீன முறையில் மணல் இல்லாமல் குறைந்த நீரில், குறுகிய காலத்தில் வளரும் கால்நடை தீவன மக்காச்சோள பயிரினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

~~~~~

திருவள்ளூர் மாவட்டம், மாதவரத்தில் உள்ள கால்நடை பல்கலைக்கழகத்தில் நவீன முறையில் மணல் இல்லாமல் குறைந்த நீரில், குறுகிய காலத்தில் வளரும் கால்நடை தீவன மக்காச்சோள பயிரினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (23.03.2017) பார்வையிட்டு கூறியதாவது

தமிழக அரசு திருவள்ளூர் மாவட்டத்தில் கோடைக்காலத்தில் கால்நடை தீவன தட்டுப்பாட்டை போக்கும் வகையில் கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் குறைந்த காலத்தில் பலன் தரும் தீவன சோளமான சொர்க்கம் 400 ஏக்கரில் வளர்க்கப்படவுள்ளது. ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கர் நிலத்தில் தீவன பயிர் செய்ய தேர்வு செய்து சோளம் வழங்கப்படவுள்ளது. மேலும், நீர் பற்றாக்குறையான இத்தருணத்தில் குறைந்த நீரைக்கொண்டு நிலமில்லாத விவசாயும் மணலின்றி கால்நடை தீவன மக்காச்சோள பயிர் வளர்க்கும் முறையினை மாதவரம் கால்நடை பல்கலைக்கழகம் செயல்படுத்தி வருகிறது. மாவட்ட நிர்வாகமும், கால்நடை பல்கலைக்கழகமும் இணைந்து விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

இதே போன்று அசோலா தீவனமும் வளர்க்கப்பட்டு வருகிறது. இதுகுறித்தும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது. அசோலா கால்நடைகளுக்கு தீவனம் மட்டுமின்றி, கோழிகளுக்கும் தீவனமாக பயன்படுத்தலாம். நவீன முறையில் வளர்க்கப்படும் தீவனம் 10 நாட்களில் கால்நடைகளுக்கு வழங்குவதற்கு தயாராகி விடும். இந்த கோடை காலத்தில் பசுந்தீவன தட்டுப்பாட்டை போக்கி பால் உற்பத்தியை பெருக்கிட இது சிறந்த முறையாகும். விவசாயிகள் அறிந்து பயன்பெற வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் என்று கூறினார்.

இந்நிகழ்வின்போது தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழக துணைவேந்தர் திரு.எஸ்.திலகர், மாதவரம் கால்நடை பல்கலைக்கழக முதல்வர் திரு.டென்சிங். கால்நடைத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.த. இராமமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.
~~~~~